பக்கங்கள்:-15

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 05 | ஞாயிற்றுக்கிழமை | 20.08.2023 | அதிர்வு 19

## கணிதப் பிரிவில் முதலிடம் பிடித்த மாணவன் திடீரென உயிர்மாய்ப்பு

### கிளிநொச்சியில் சோகம்



கிளிநொச்சி மாவட்டத்தில் கணிதப் பிரிவில் முதலிடம் பிடித்த மாணவன் ஒருவர் உயிர் மாய்த்துள்ளார்.

சந்திரமோகன் 02▶

### இது கோட்டா ஆட்சி அல்ல; இது ரணிலின் ஆட்சி!

# சதித் திட்டம் எதற்கும் இங்கு இடமளியேன்!



### ஜனாதிபதி திட்டவட்டம்

**கொழும்பு, ஓகஸ்ட் 20**

**“இது கோட்டாபயவின் ஆட்சி அல்ல; இது ரணிலின் ஆட்சி. எந்தச் சதித்திட்டங்களுக்கும் இங்கு இடமில்லை. மீண்டெழுந்து வரும் நாட்டை மீண்டும் இருண்ட யுகத்துக்குள் கொண்டு செல்லத் திரைமறைவில் நடக்கும் ஆட்சிக் கவிழ்ப்புச் சூழ்ச்சிகள் தவிடுபொடியாகும். அந்தச் சூழ்ச்சிகளை - சதித்திட்டங்களை - மக்கள் ஒருபோதும் ஆதரிக்கமாட்டார்கள்.”**

**- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.** 02▶

# ரணில் நினைத்தால் தீர்வு காண முடியும்!

### இப்படிச் சொல்கின்றார் சம்பந்தன்



“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மனதார விரும்பினால் விரைந்து அரசியல் தீர்வு காண முடியும்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் 02▶



# தேசிய வேலைத்திட்டத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவு

### சஜித் பகிரங்க அறிவிப்பு

“நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்குத் தேசிய ஒருமைப்பாடு மற்றும் இணக்கப்பாடு கொண்ட தேசிய வேலைத்திட்டமொன்று அவசியம். அவ்வாறான வேலைத்திட்டத்துக்கு ஆதரவு வழங்கத் தயார்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ 02▶

# நாட்டை மீட்டெடுத்த தலைவர் ரணிலே!

### மக்கள் சரியான முடிவை எடுக்க வேண்டும் யாழில் பாலித ரங்கே பண்டார வலியுறுத்து



“நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்படும்போது அதனை மீட்டெடுத்தவர் ரணில் விக்கிரமசிங்கவே. அந்தத் 03▶

### இ/பரகசியம்



‘நினைப்புத்தான் பிழைப்பைக் கெடுக்கும்’ – என்பார்கள். நமது அதிஉத்தமரின் நிலைமையும் அதுதான் போலவே தோன்றுகின்றது.

இராணுவத் தந்திரோபாயத்திலும், படை நடவடிக்கைகளிலும் சாதனை படைத்தவர் பாதுகாப்பு 02▶

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

அமைச்சின் செயலாளராகவிருந்த முன்னாள் இராணுவ வீரர் கோட்டாபய ராஜபக்ஷ. படைகளின் மீது அதீத அதிகாரமும்,செல்வாக்கும், மேலாண்மையும் கொண்டிருந்தவர்.

ஆனால், தாம் ஜனாதிபதியாக இருந்த போது தமக்கு எதிராக மூன்று, நான்கு மாதங்களாகத் தீவிரமடைந்த மக்கள் புரட்சியை – கிளர்ச்சியை – பொலிஸார் மற்றும் முப்படையினரைக் கொண்டு சரிவரக் கையாளத் தெரியாதமையினால் நாட்டை விட்டு அவர் ஓட்டம் பிடிக்க வேண்டியவரானார் என்று நம்புகிறார் நம் தற்போதைய அதிஉத்தமர்.

அந்த நெருக்கடிக்குள் தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற போதும், அப்போது தமக்கு எதிராகவும் கிளர்ந்த பொதுமக்கள் எதிர்ப்பை பொலிஸையும் படைகளையும் ஒன்று திரட்டி, தாம் லாவகமாகக் கையாண்டு அந்த முயற்சிகளை வெற்றிகரமாக முறியடித்தார் என்ற நினைப்பு அவருக்கு.

அப்படி அவர் எண்ணுவது – கருதுவது – கூட ஒருவகையில் சரியானதுதான். மறுக்க முடியாததுதான்.

ஆனால், இந்தத் திமிர் நினைப்பு தான் அவர் (எதிர்காலப்) பிழைப்பைக் கெடுக்கும் போல் தெரிகின்றது.

'இது கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி அல்ல ரணிலின் ஆட்சி. இங்கு எந்தச் சதித் திட்டத்திற்கும் இடமில்லை. அவை எவற்றிற்கும் இடமளிக்க மாட்டேன்' – என்று அவர் கறுவுவது கூட இந்த நிலைப்பில்தான்.

அடுத்த ஓராண்டில் ஜனாதிபதித் தேர்தல். அதற்குள் ஒரு பெரும் சதித்திட்டம் கட்டவிழ்ந்து, கோட்டாபய ராஜபக்ஷவைப் போல அவரை வீட்டுக்குத் துரத்தி விடும் என்று யாரும் எண்ணவும் இல்லை. அதற்கு இடம் இருப்பதாகவும் யாரும் கருதவும் இல்லை. ஆகவே அதிஉத்தமர் இது விடயத்தில் தமது முஷ்டியை முறுக்கிக் கொண்டு கறுவுவதில் அர்த்தமில்லை.

ஆனால் ஒரு பொது சதித்திட்டம் கட்டவிழ்வதற்கான ஒரு சந்தர்ப்பம் – வாய்ப்பு – பகிரங்கமாக உண்டு. அது, அடுத்த வருடம் பிற்பகுதியில் – அல்லது அதிஉத்தமரின் முயற்சி மற்றும் நடவடிக்கைகள் காரணமாக அடுத்த வருடம் முற்பகுதியில் நடைபெறக்கூடிய ஜனாதிபதி தேர்தலின் போது கட்டவிழலாம்.

அது சாதாரண மக்கள் போராட்டக் களம் அல்ல; கிளர்ச்சி நடவடிக்கையும் அல்ல – முப்படைகளையும் பொலிஸையும் ஏவி விட்டு அடக்குவதற்கு.

அது – ஜனநாயக வாக்களிப்புக் களம். அதை கையாள்வது வேறு தந்திரோபாய வடிவத்திலாகும்.

கால் நூற்றாண்டுக்கு மேல் தமது கட்சிக்குத் தொடர்ந்து தலைமை வகிக்கும் ரணில் விக்கிரமசிங்க பெரும்பாலும் அந்த தந்திரோபாயத்தில் வெற்றியீட்டியவரும் அல்லர். அதற்கான தந்திரசாலியும் அல்லர். 2005 இலேயே கைக்கு வாய்ந்த வாய்ப்பை, வாய்க்கெட்டாத நிலையில் கோட்டை விட்ட அரசியல் ஏமாளி அவர். அவ்வப்போது ஏதேனும் 'தொத்துப்பொறி' வெற்றி – 2001 டிசெம்பர் பொதுத் தேர்தலின் போது மட்டு மட்டாகக் கிட்டியமை போல – தேர்தலில் அவர் தலைமையிலான கட்சிக்குக் கிடைத்திருக்கலாம். மற்றப்படி அவர் ஒன்றும் 'கரிஸ்மற்றிக் லீடர்' அல்லர் – ஜனநாயகத் தேர்தல்களில் மக்களை வசியம் பண்ணித் தம் பக்கம் இழுப்பதற்கு.

இப்போதும் கூட அவர் பண்ணும் அரசியல் தகிடுதத்தங்கள் மற்றும் தேவையற்ற 'அளாப்புணி' வேலைகள் வரும் ஜனாதிபதித் தேர்தலையும் வழமை போல அவர் கோட்டை விடுவதற்கான சூழலையே ஏற்படுத்தி வருகின்றன.

அவர்தான் யாருடைய ஆலோசனையையும் கேட்பவர் அல்லவே? இதைத் தான் 'கெடுகுடி சொற் கேளாது' என் பார்களோ என்னவோ...?

அடுத்த தேர்தலில் கைக்குக் கிடைக்கக்கூடிய வெற்றி வாய்ப்பை கொடுக்கிறேன் பார் என்று அவர் மல்லுக் கட்டிக் கொண்டு, துடியாய்த் துடித்து, தேவையற்ற காரியங்களை பண்ணும்போது, யார் சொல்லியும் அவர் கேட்கப் போவதில்லை. அது அவரது பண்பியல்பு. வழமை போல பட்டுத் தெளியட்டும். விட்டு விடுவோம்.

## தேசிய வேலைத் திட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள விசேட அறிவிப்பில் கூறியவை வருமாறு:–

"நாட்டில் பொருளாதார மற்றும் சமூக அழிவு நடைபெற்று வருகின்றது. சுமார் 60 ஆயிரம் குடும்பங்கள் சுத்தமான குடிதண்ணீரை இழந்துள்ளன. வறட்சி காரணமாக இலட்சக்கணக்கான ஹெக்டெயர் விவசாய நிலங்கள் அழிவடைந்துள்ளன. விவசாயிகள் உட்பட ஒட்டுமொத்த உழைக்கும் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

5 ஆயிரம் பாடசாலை ஆசிரியர்களும் ஏராளமான மருத்துவ நிபுணர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இதனால், மருத்துவமனைகளின் வார்ட் தொகுதிகள் மூடப்பட்டு அறு வைச் சிகிச்சைகள் கூட இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு தேசிய ஒருமைப்பாடு மற்றும் இணக்கப்பாடு கொண்ட தேசிய வேலைத்திட்டமொன்று அவசியம்.

வீழ்ந்த நிலையில் இருந்து நாட்டை மீட்பதற்கான வேலைத்திட்டம் அரசிடம் இருந்தால், எதிர்க்கட்சியாக அனைவரும் அதிகபட்ச ஆதரவை வழங்க விரும்பினாலும் அவ்வாறான வேலைத்திட்டமொன்று தற்போதைய அரசிடம் இல்லை.

அரசு விளையாடும் இந்த அரசியல் சூதாட்டங்களைத் தவிர்த்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும். இதற்கான அறிவு அரசுக்கு இல்லையென்றால், எதிர்க்கட்சியிடம் இருக்கும் இதற்குத் தேவையான அறிவையும், மனித வளத்தையும் வழங்க விரும்புகின்றோம்.

பதவிகளுக்கு அடிமைப்பட்டு நாட்டையும் மக்களையும் காட்டிக்கொடுக்க நாம் தயாரில்லை. இது போன்ற தேசத் துரோகச் செயல்களை நீங்கள் செய்ய விரும்பினால், வேறு யாரையாவது பார்த்துக்கொள்ளுங்கள். நாட்டின் தேசிய நலனைப் புறந்தள்ளி விட்டு பெருந்தீனி அரசியலைப் பின்பற்ற ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இல்லை." – என்றார்.

## ரணில் நினைத்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நாட்டில் இன, மத ரீதியிலான பிரச்சினைகள் திடீரென அதிகரித்துள்ளன. தமிழ்ப் பேசும் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கைக் குறிவைத்து பௌத்த, சிங்களப் பேரினவாதத் தரப்பினர் வன்முறைகளைத் தூண்டும் விதத்தில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

நாம் மீண்டும் வன்முறையை விரும்பவில்லை மீண்டும் ஒரு போரை விரும்பவில்லை. நாம் சகல உரிமைகளுடன் நிம்மதியாக வாழவே விரும்புகின்றோம். இந்த நிலைமை ஏற்பட வேண்டுமெனில் விரைந்து அரசியல் தீர்வு காண வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மனதார விரும்பினால் இந்தக் கருமத்தை நிறைவேற்ற முடியும்."
– என்றார்.

## சதித் திட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"மக்களுக்காகவே நாட்டைப் பொறுப்பேற்றேன் ஜனாதிபதிப் பதவியை ஏற்றேன். எந்தத் தடைகள் வந்தாலும் மக்கள் பலத்துடன் அவற்றைத் தகர்த்தெறிந்து நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து முழுமையாக மீட்டெடுப்பேன். நாட்டில் பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்துவேன். கஷ்டப்படும் மக்கள் மீண்டெழுவார்கள். மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அவர்களின் பிரதிநிதிகளுடன் பேசித் தீர்வு காண்பேன்."
– என்றார்.

## கணிதப் பிரிவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

தேனுஜன் (வயது 22) என்ற மாணவனே உயிரிழந்தார்.

கிளிநொச்சி, விவேகானந்தநகர் பகுதியைச் சேர்ந்த இந்த இளைஞன் நேற்று தனது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

2020 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் கிளிநொச்சி மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றவர் இவர்.

2022 இல் நடைபெற்ற 2021 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையில் ஆங்கிலம் உட்பட நான்கு பாடங்களிலும் "ஏ" சித்தியுடன் பொது அறிவுக்கான பொதுப்பரீட்சையிலும் 76 புள்ளிகளைப் பெற்றவர்.

மொரட்டுவ பல்கலைக்கழக அனுமதி கிடைத்து, அங்கு கல்வி பயில இவர் சென்றிருந்தார்.

எனினும், இந்த வருடத்தில் தன்னால் கல்வியைத் தொடரச் சிரமமாக இருக்கின்றது எனக் குறிப்பிட்டு, அடுத்த வருடத்திலிருந்து பல்கலைகழகக் கல்வியைத் தொடர விரும்புவதாகத் தெரிவித்து விட்டு வீடு திரும்பியிருந்தார்.

மன அழுத்தத்துக்கான மருத்துவ ஆலோசனைகளையும் இவர் பெற்றிருந்தார்.

இந்தநிலையில் தனது வீட்டில் நேற்று தற்கொலை செய்துள்ளார். இவரது தந்தை, தாய் இருவரும் ஆசிரியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பிரதிநிதித்துவமா? அதற்கு ஆப்பா?

'உள்ளதையும் கெடுத்தானாம் கொள்ளிக் கண்ணன்' - என்பார்கள்.

இடைக்கால ஏற்பாட்டுக்கான ஒரு ஜனாதிபதியாக நாடாளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, இந்த இடைக்காலத்துக்குள் உள்ளதை எல்லாம் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விட்டுத்தான் ஓய்வாரோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கின்றது.

இவர் நல்லாட்சி அரசின் பிரதமராக இருந்தபோது, இவரின் தீவிர முயற்சியால் 2017 இல் நிறைவேற்றப்பட்ட சட்டமூலம் ஒன்றின் காரணமாகவே நாட்டில் மாகாண சபை முறைமையே இன்று செயலிழந்து போய்க் கிடக்கின்றது.

மாகாண சபைத் தேர்தல் முறைமையை டுத்த ஒரு வருட காலத்துக்குள் மறுசீரமைப்பேன் என்று 2017 இல் உறுதிமொழி அளித்து, அதன் அடிப்படையில் இந்த மாகாணசபைத் தேர்தல் சட்டத்தையே சட்டவறிதாக்கிய அரசியல் பிரகிருதி இவர்தான்.

இப்போது, ஆறு வருடங்கள் கழித்தும் கூட மாகாண சபை தேர்தல் எதுவும் நடக்கவில்லை. எல்லா மாகாண சபைகளும் மக்கள் பிரதிநிதிகளை இழந்து, இப்போது ஜனாதிபதியாக இருக்கும் இவரது பிரதிநிதிகளான ஆளுநர்களினால் நிர்வகிக்கப்படுகின்ற நிலைமை.

இப்போதும் கூட பழைய மாகாண சபை தேர்தல் சட்ட விதிகளை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரும் சட்டமூலத்தை சாதாரண பெரும்பான்மையால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி, மாகாண சபைத் தேர்தலை அடுத்த இரண்டு, மூன்று மாதங்களுக்குள் நடத்த முடியும். ஆனால் தேர்தல் என்றாலே மிரண்டு, அஞ்சி நிற்கும் அதி உத்தமர் அதைச் செய்யத் தயாரில்லை.

2017,இல் தான் பிரதமராக இருந்தபோது நடத்தப்பட வேண்டியிருந்த இரு மாகாண சபைத் தேர்தல்களை எதிர்கொள்ள அஞ்சியே, அத்தேர்தல் தொடர்பான சட்டங்களை நடைமுறையில் இல்லாமலாக்கும் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றி, அத்தேர்தல்களுக்கு நிரந்தரமாக ஆப்படித்தார் ரணில். இப்போதும் தேர்தல் என்றால் அதனை எதிர்கொள்ள அஞ்சும் அவர், மாகாண சபைத் தேர்தலை நடத்த முன்வரவே மாட்டார், அதற்கு வழி செய்யவும் மாட்டார் என்று அடித்துக் கூறலாம்.

ஏற்கனவே தேசிய ரீதியில் நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சித் தேர்தல்களை நிதி அமைச்சர் என்ற முறையில் தமக்குள்ள அதிகாரங்களைப் பாவித்து, தேர்தலுக்கான நிதியை வெட்டி, அந்தத் தேர்தல்களுக்கு ஆப்படித்து, இல்லாமல் ஆக்கிய 'ஜனநாயகக் காவலர்'அவர்.

இப்படித் தேர்தல் என்றாலே அஞ்சும் அவர், உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகள், மத்திய அரசாங்கம் என்ற மூன்றையும் மையப்படுத்தி, புதிய நிர்வாகப் பொறி முறை ஒன்றைத் தாம் கொண்டு வரப் போகிறார் என்று கதை அவிழ்த்துவிட்டிருக்கின்றார்.

இந்த அதிகாரப் பகிர்வு மையங்களின் மக்கள் பிரதிநிதித்துவ முறைமைகளுக்கு நிரந்தரமாக ஆப்படித்து நிற்கும் ரணில் விக்கிரமசிங்க, இந்த மூன்று மட்ட அதிகார மையங்களையும் ஒன்றிணைத்து புதிய நிர்வாகப் பொறிமுறை ஒன்றை உருவாக்கப் போகின்றார் என்று கூறுவது அபத்தமானது, அர்த்தமற்றது.

உள்ளதையும் கெடுத்து விட்டு, புதிது குறித்து வெறும் கயிறு விடுகின்றார் அவர். உண்மையான மக்கள் பிரதிநிதித்துவத்திற்கு இடம் கொடுக்காத அவர், இப்படி வெறும் தத்துவங்கள், நிர்வாக விழுமியங்கள், முறைமைகள் குறித்துப் பேசுவது வேடிக்கையானது.

## நாட்டை மீட்டெடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தருணத்தில் எந்தவொரு எதிர்க்கட்சித் தலைவரும் முன்வரவில்லை."

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

யாழ். வட்டுக்கோட்டைப் பகுதியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

"வட்டுக்கோட்டை வாழ் மக்களை நான் நம்புகின்றேன். இந்த நேரத்தில் எனது கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆசிகளையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனும் நானும் ஒன்றாக நாடாளுமன்றம் சென்றோம். மகேஸ்வரன் ஒரு போராளி ஆயுதமின்றி போராட்டம் செய்தவர். அவர் வடக்குப் பிரச்சினையை மட்டுமல்லாது முழு இலங்கை யிலும் ஏற்படும் பிரச்சினை பற்றி பேசிய ஒருவர்.

1948 இல் இந்த ஐக்கிய தேசியக் கட்சி அனைத்து இனத்தவர்களையும் இணைத்தே உருவாக்கப்பட்டது. வேறுபாடு அற்ற ஒரு கட்சியே எமது கட்சி. டி.எஸ் சேனநாயக்க இந்தக் கட்சியை இலங்கையருக்கான கட்சியாகவே உருவாக்கினார். ஆகையால் இப்போதும் பலமாக எமது கட்சி உள்ளது.

பின்னர் பண்டாரநாயக்கவால் உருவாக்கப்பட்ட கட்சி (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி) பௌத்த சிங்கள பேரினவாதத்தை அடிப்படையாகக்கொண்டது. பின்னர் தமிழ், முஸ்லிம் கட்சிகளையும் பலர் உருவாக்கினர்.

முப்பது வருடங்களாக யுத்தம் தொடர்ந்தது. ஜே.வி.பியும் யுத்தத்தில் ஈடுபட்டது. இதன் விளைவால் எமது நாட்டின் எதிர்காலம் படுபாதாளத்துக்குள் சென்றது. பொது மக்கள் அல்லலப்பட்டார்கள் அரசியல்வாதிகள் குதூகலமாக இருந்தார்கள்.

எப்போதெல்லாம் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி இல்லாமல் போகின்றதோ அப்போதெல்லாம் நாடு கீழே விழுந்தது. நாடு கீழ் விழுந்த போதெல்லாம் அதனைத் தூக்கி விட்டது ஐக்கிய தேசியக் கட்சியே.

ஸ்ரீமாவே பண்டாரநாயக்க, மஹிந்த மற்றும் கோட்டாவின் ஆட்சிக் காலங்களில் நாடுகள் பாதாளத்தினுள் தள்ளப்பட்ட போதெல்லாம் அதனை மீட்டெடுத்தது ஐக்கிய தேசியக் கட்சியாகும்.

கடந்த வருடம் நாடு பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டபோது எதிர்க்கட்சியைப் பொறுப்பேற்கச் சொல்லும்போது டலஸ் அழகப்பெரும, அநுரகுமார, சஜித் என அனைவரும் ஏதோவொரு காரணத்தைச் சொல்லி தப்பித்தார்கள். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினரே காணப்பட்டார். அவரே நாட்டை மீட்டெடுத்தார்.

2019 ஆம் ஆண்டு அரசியல் மாற்றத்தில் சஜித் முறையான முடிவை எடுத்திருந்தால் நாடு பொருளாதார நெருக்கடிக்குச் சென்றிருக்காது. சஜித் தனது தகப்பன் பிரேமதாஸவின் உரோமத்துக்குக் கூடப் பொருந்தாதவர்.

தற்போது இந்த நாட்டின் ஜனாதிபதியின் இலக்கு 2048 இற்கு முன்னர் இலங்கையைத் தன்னிறைவான நாடாக மாற்றுவதேயாகும். எனவே, மக்கள் சரியான தீர்மானம் எடுக்க வேண்டும் எனக் கோருகின்றோம்.

வடக்கிலுள்ள அனைத்து மாவட்டங்களையும் எமது அமைப்பாளர் விஜயகலா மகேஸ்வரன் மூலம் வளர்த்தெடுக்கத் தீர்மானித்துள்ளோம். எமது நாடு ஒரு நல்ல நிலைக்கு வரவேண்டும். அதுவே எமது கட்சியின் நோக்கம்." – என்றார்.

# குருந்தூரில் பொங்கலுக்கு இடமளித்த தேரர்களை வைகிறார் மேர்வின் சில்வா!



முல்லைத்தீவு குருந்தூர்மலையில் தமிழ் மக்கள் பொங் கல் வழிபாடுகளை மேற்கொள்ள இடமளித்த பௌத்த தேரர்களுக்கு எதிராக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கண்டனம் வெளியிட்டுள்ளார்.

பௌத்த மதத்ததை மதிக்கும் மற்றும் உண்மையான சிங்கள வராக தம்மை வெளிக்காட்டிய வாரியபொல ஸ்ரீ சுமங்கல தேரரை போன்று, தேரர்கள் செயல்பட்டிருக்க வேண்டுமென கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் மேர்வின் சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர் –

”பௌத்த மதத்தின் மீது மற்றும் விகாரைகள் மீது கை வைத்தால் தமிழர்களின் தலைகளை வெட்டுவேன் எனக் கூறினேன்.

அன்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரகாரனுக்கும் நான் இதையேதான் கூறியிருந்தேன்.

இவ்வாறான கருத்துக்களை முன்வைக்க நான் ஒருபோதும் பயப்படப் போவதில்லை. இன்று வடக்கு மற்றும் கிழக்கிலிருக்கும் விகாரைகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

விகாரைகள் இருந்த இடங்களில் கோவில்கள் கட்டப்படுகின்றன.

கடந்த காலங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

நான் இனவாதத்தைத் தூண்ட விரும்பவில்லை. எனினும், தற்போது இலங்கைக்கு பௌத்த மதத்தை மதிக்கும் உண்மையான பௌத்த தேரர்கள் தேவை.

உண்மையான பௌத்த எண்ணம் மனதில் இருக்குமாயின் இவ்வாறான செயல்கள் இடம்பெற யாரும் இடமளித்திருக்க மாட்டார்கள்.

இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்கள் என கூறும் தரப்பினர் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை எதிர்க்கின்றனர் எனத் தெரிவிக்க வேண்டும்.

ஈழத்தை குறித்தும் 13 ஆவது திருத்தத்தை குறித்தும் பேசுவது தடை செய்யப்பட்டுள்ளது. இதனை என்னைப் போல அனைவரும் முன்வந்து தைரியமாக கூற வேண்டும்” – என்றார்.

# விசேட வைத்திய நிபுணர்கள் ஓய்வின் பின்னரும் சேவைக்கு



சுகாதாரத் துறையின் தேவைகளைக் கருத்தில் கொண்டு ஓய்வு பெற்ற விசேட வைத்திய நிபுணர்களை மீண்டும் பணிக்கு அமர்த்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுகாதாரத் துறையில் கிட்டத்தட்ட ஐந்நூறு விசேட வைத்தியர்களின் வெற்றிடங்கள் காணப்படுகின்றன எனவும், அந்த வெற்றிடங்களுக்காக இவர்கள் ஆள்சேர்ப்பு செய்யப்படுவர் எனவும் சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஜி.விஜசூரிய தெரிவித்தார்.

கொழும்பிற்கு வெளியே உள்ள தூரப் பிரதேசங்களில் விசேட வைத்தியர்களுக்கான வெற்றிடங்கள் அதிகம் காணப்படுகின்றன எனவும், ஓய்வுபெற்ற விசேட வைத்திய நிபுணர்கள் பணிக்குத் திரும்ப விரும்பினால் அவர்களுக்கு சகல வசதிகளையும் வழங்குவதற்கு சுகாதார அமைச்சு தயாராக இருப்பதாகவும் சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.





# Pearl Island Inn

## Hotel & Restaurant

**Dine - in | Take Away | Soft Drinks**

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன்

உயர்தரம் வாய்ந்த தங்கும் வசதிகள் (Rooms),

உலகத் தரம் வாய்ந்த

யாழ்., இந்திய, சைனீஸ், மொங்கோலியன்

உணவு வகைகள்

மற்றும்

குளிர்பானங்களை இங்கிருந்தும்

உங்கள் வீடுகளுக்கும் எடுத்துச் சென்று

சுவைத்து மகிந்திட எம்முடன் இணைவீர்

**உங்கள்**

S.Ubesgaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn (குழுமம்)

**தொடர்புகளுக்கு**

077 002 2088, 021 222 2678
No. 603, Hospital Road, Jaffna
www.pearlislandinn.com



# மன்னாரில் காணி விடுவிப்புத் தொடர்பிலான கூட்டத்தைப் புறக்கணித்த தமிழ் எம்.பிக்கள்







(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகள் தொடர்பிலும் அவற்றை விடுவிப்பது தொடர்பிலுமான கூட்டம் நேற்று சனிக்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டி மெல்லின் நெறிப்படுத்தலில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் காதர் மஸ்தான் தலைமையில் இடம் பெற்றது.

ஜனாதிபதி செயலகத்தின் பிரதிநிதிகள், வன வளத் திணைக்களைப் பிரதிநிதிகள்,வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம் பெற்ற இந்தக் கூட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கி கையகப் படுத்தப்பட்ட காணிகள் தொடர்பிலும் அவை விடுவிப்பு தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதன் போது பிரதேச செயலாளர்கள், கணி உத்தியோகஸ்தர்கள், நாடாளுமன்ற உறுப்பினரான ரிஷாத் பதியுதீன் மற்றும் முன்னாள் நகரசபை, பிரதேச சபை தவிசாளர்கள் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கூட்டம் ஏற்கனவே காணி விடுவிப்பு தொடர்பில் உயர் மட்டங்களால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் தெரியப்படுத்துவதற்கான கூட்டமாகவே காணப்பட்டது.

அதே நேரம் உள்ளூர் அரச பிரதிநிதிகளினால் தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பிலும் இறுதியான விடுவிப்பு தொடர்பிலும் எந்த தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் கலந்துரையாடப்பட்ட விடயங்களை மேலதிக அனுமதிக்காக மேலிடத்துக்கு அனுப்பிவைப்பதற்கான தீர்மானமே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்தக் கூட்டத்திற்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அழைக்கப்பட்ட போதிலும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

இவ்வாறான கூட்டங்களுக்கு உரிய விதத்திலும் உரிய நேரத்திலும் தங்களுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை எனவும், கூட்டங்களில் தங்களது கருத்துக்களை தெரிவிப்பதற்கு அரச தரப்பு அரசியல் பிரதிநிதிகள் வாய்ப்பு வழங்குவதில்லை என்ற அடிப்படையிலேயே தாங்கள் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தனர் எனவும் கூட்டத்தில் கலந்து கொள்ளாத தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

# வறட்சியால் 15 மாவட்டங்களை சேர்ந்த 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்பு

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, புத்தளம், குருநாகல், இரத்தினபுரி, பதுளை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் வறட்சியின் தாக்கம் அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் வறட்சியால் 21 ஆயிரத்து 999 குடும்பங்களை சேர்ந்த 70 ஆயிரத்து 238 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் 952 குடும்பங்களை சேர்ந்த 3 ஆயிரத்து 244 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 202 குடும்பங்களை சேர்ந்த 685 பேரும் வவுனியாவில் 450 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 120 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, வட மாகாணத்தில் வறட்சியால் 23 ஆயிரத்து 603 குடும்பங்களை சேர்ந்த 75 ஆயிரத்து 287 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் 18 ஆயிரத்து 951 குடும்பங்களை சேர்ந்த 63 ஆயிரத்து 136 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என நிலையம் குறிப்பிட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 8 ஆயிரத்து 892 குடும்பங்களை சேர்ந்த 29 ஆயிரத்து 508 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 7 ஆயிரத்து 739 குடும்பங்களை சேர்ந்த 25 ஆயிரத்து 891 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 2 ஆயிரத்து 320 குடும்பங்களை சேர்ந்த 7 ஆயிரத்து 737 பேரும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வட மேல் மாகாணத்தில் 5 ஆயிரத்து 219 குடும்பங்களை சேர்ந்த 17 ஆயிரத்து 073 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் புத்தளம் மாவட்டத்தை சேர்ந்த 2 ஆயிரத்து 321 பேர் உள்ளடங்குகின்றனர்.

வறட்சியான காலநிலையால் மேல் மாகாணத்தில் 2 ஆயிரத்து 890 பேரும், தென் மாகாணத்தில் 7 ஆயிரத்து 512 பேரும் மத்திய மாகாணத்தில் ஆயிரத்து 215 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஊவா மாகாணத்தில் 469 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 809 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என வறட்சி தொடர்பில் இடர் முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில் 329 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 324 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# உணவு விற்பனையில் ஈடுபடுவோருக்கு அடையாள அட்டை வழங்க நடவடிக்கை

கொழும்பு காலி முகத்திடலில் உள்ள உணவு விற்பனையாளர்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனூடாக பதிவு செய்யப்பட்ட உணவு விநியோகஸ்தர் எனும் அடையாள அட்டையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளநீர் விற்பனையாளர்கள் உள்ளிட்ட அனைத்து வகையான உணவுப் பொருள்களையும் விற்பனை செய்வோரை அடையாளங்கண்டு, அவர்களுக்கான அடையாள அட்டைகள் வழங்கப்படும் என கொழும்பு நகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி ருவன் விஜேமுனி தெரிவித்துள்ளார்.

அத்துடன், அவர்களுக்கான பயிற்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும், இதனூடாக உணவு பாதுகாப்பு, உத்தியோகபூர்வ ஆடை என்பன தொடர்பில் அவர்களுக்கு தெளிவூட்டி வாய்மொழி மூல கேள்விகளுக்கு சரியான பதில்களை வழங்குவோருக்கு அடையாள அட்டைகளை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த அடையாள அட்டைகள் ஒரு வருட காலத்திற்கு செல்லுபடியாகும் எனவும் கொழும்பு நகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி ருவன் விஜேமுனி தெரிவித்துள்ளார்.

# சூழல் வெப்பமடைவதனால் மன அழுத்தம் அதிகரிக்கும்!

## - சுகாதார அமைச்சு எச்சரிக்கை

சூழல் வெப்பமடைவதனால் மன அழுத் தம் அதிகரிக்கும் சாத்தியமுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சூழல் வெப்பமடைதல் அதிகரித்துச் செல்லும் நிலையில் மன அழுத்தமும் உக்கிரமடையும் நிலைமை அதிகரித்துச் செல்கிறது என கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் விசேட உளநல வைத்திய நிபுணர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார்.

அதிக வெப்பத்துடனான காலநிலை தொடரும் போது, ஏற்கனவே நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் உளநலம் மேலும் சிக்கலுக்குள்ளாகும் நிலை காணப்படுகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

மருந்துகளை உட்கொள்வோர் இவ்வாறான அதிக வெப்பத்துடனான காலப்பகுதியில் அதிகளவு நீரை பருகுவது அத்தியாவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உடலில் நீரின் அளவு குறையுமிடத்து அதனால் ஏற்படும் பாதிப்புகள் அதிகரிக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனவே, அனைத்து தரப்பினரும் இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டியது கட்டாயமானது என வைத்திய நிபுணர் ரூமி ரூபன் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சியினால் 15 மாவட்டங்களைச் சேர்ந்த 2 லட்சத்து. 10 ஆயிரத்து 798 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, புத்தளம், குருநாகல், இரத்தினபுரி, பதுளை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் வறட்சியின் தாக்கம் அதிகரித்துள்ளது.

# அயராது பாடுபட்டு ரணிலை வெற்றி பெறச் செய்வோம்!

## 'மொட்டு' எம்.பி. உறுதி

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையானவர்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெறச் செய்வதற்குப் பாடுபடுவார்கள். மக்கள் ஆணையற்ற சிலரின் கருத்துக்களை மக்கள் நிச்சயம் நிராகரிப்பர்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

"எதிர்காலத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவார் என்று அக்கட்சியின் ஒரு தரப்பினர் வெவ்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். முடிந்தால் பொதுஜன பெரமுனவில் களமிறக்கப்படவுள்ள ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை நாட்டுக்கு வெளிப்படுத்துமாறு வலியுறுத்துகின்றோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அக்கட்சியிலிருந்து வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கும் என்றும், அதற்காக மூன்றெழுத்து பெயர் கொண்ட தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்றும் ஒரு தரப்பினர் குறிப்புக்களை வழங்கி மக்களை ஏமாற்றி வருகின்றது.

முடிந்தால் சகல தரப்பினரதும் இணக்கப்பாட்டுக்கமைய பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்குமாறு சவால் விடுக்கின்றோம்.

நாட்டில் ஏற்பட்ட ஸ்திரமற்ற நிலைமையால் தோன்றிய நெருக்கடிகளிலிருந்தும், நாட்டை மீளக் கட்டியெழுப்பி பொருளாதார, சமூக மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திக் கொடுத்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டங்கள், மக்கள் ஆணையற்ற பொதுஜன பெரமுனவின் சில உறுப்பினர்களுக்கு மறந்து போயுள்ளது.

மீண்டும் அவர்கள் தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு வழியேற்படுத்திக் கொடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தை மறந்து அந்த கட்சியின் சில உறுப்பினர்கள் செயற்படுகின்றமை கவலைக்குரியதாகும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள ஸ்திரமின்மை மற்றும் நெருக்கடிகளை தீர்த்து நாட்டில் ஸ்திரத்தன்மையைக் கட்டியெழுப்பக் கூடிய ஒரே தலைமைத்துவமாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு காணப்பட்ட ஒரேயொரு தெரிவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே.

இவ்வாறான நிலையில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளைத் தீர்த்து சர்வதேசத்தின் ஆதரவுடன் நாட்டைக் கட்டியெழுப்பி பொருளாதார, சமூக, அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திய தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது நாட்டு மக்கள் மத்தியில் நம்பிக்கைக் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

முற்போக்கான பார்வையுடனும், சர்வதேசத்தின் ஒத்துழைப்புடனும் இலங்கையை மீண்டும் முன்னோக்கிக் கொண்டு செல்லக் கூடிய இயலுமை கொண்ட ஒரேயொரு தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே.

இது தொடர்பில் பரந்துபட்ட புரிந்துணர்வு கொண்ட பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையானவர்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெறச் செய்வதற்குப் பாடுபடுவார்கள். மக்கள் ஆணையற்ற சிலரின் கருத்துக்களை மக்கள் நிச்சயம் நிராகரிப்பர்." – என்றார்.



# காங்கேசன்துறை, மாங்கொல்லை பகுதியில் இரும்புத் திருடரால் மக்கள் பெரும் விசனம்

## உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிப்பு

காங்கேசன்துறை, மாங்கொல்லை பகுதியில் திருடர்களின் நடமாட்டம் அதிகளவில் காணப்படுகிறது என்று அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கடந்த 33 வருட காலமாக உயர்பாது காப்பு வலயமாக காணப்பட்ட மாங்கொல்லை பகுதியில் இருந்து கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தினர் வெளியேறி உள்ளனர். ஆனாலும் குறித்த பகுதி இராணுவத்தால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவில்லை.

அதனால் அக்காணி உரிமையாளர்கள் அப்பகுதியில் குடியமர முடியாத நிலை காணப்படுகிறது.

அந்த நிலையில் அப்பகுதிக்குள் ஊடுருவும் இரும்பு திருடர்கள் வீடுகளில் உள்ள இரும்புகளை திருடிச் செல்கின்றனர்.

அது குறித்து தெல்லிப்பழை பிரதேச செயலர் , காங்கேசன்துறை பொலிஸார் உள்ளிட்ட தரப்பினருக்கு பல தடவைகள் வீட்டு உரிமையாளர்கள் முறைப்பாடு செய்தும் திருட்டைக் கட்டுப்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பிரதேச செயலரிடம் முறையிட்ட போது, இராணுவத்தினர் உத்தியோகபூர்வமாகத் தம்மிடம் அப்பகுதியை கையளிக்காத நிலையில் தாம் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்க முடியாது என்று குறிப்பட்டுள்ளனர்.

பொலிஸாரிடம் முறையிட்டோருக்கு பொலிஸார் நடவடிக்கை எடுப்பதாக கூறிய போதிலும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

பொலிஸார் இது தொடர்பில் அசமந்தப் போக்கில் உள்ளனர் என்று மக்கள் விசனம் அடைகின்றனர்.

இவ்வாறாக பொறுப்பு வாய்ந்தோர் திருட்டைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க தவறி வரும் நிலையில் தற்போது திருட்டுகள் அதிகரித்து வருகின்றன என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அது தொடர்பில் தகவல் அறிந்து வீட்டு உரிமையாளர்கள் தமது காணிக்குள் வரும் போது , இரும்பு திருடர்கள் தம்மை புலனாய்வு பிரிவினர் என கூறி , காணி இன்னமும் இராணுவ கட்டுப்பாட்டினுள் தான் இருக்கிறது. இதற்குள் நீங்கள் வர கூடாது என அச்சுறுத்துகின்றனர் என்றும் உரிமையாளர் கண்களுக்கு முன்னாலையே வீடுகளை உடைத்து இரும்புகளை திருடி செல்கின்றனர் என்றும் மக்கள் கூறுகின்றனர்.

# கிழக்கு மாகாணப் பெண்களது அபிவிருத்திக்கு உதவுங்கள்

## மகளிர், சிறுவர் அலுவல்கள் அமைச்சரிடம் கோரிக்கை

(அஸ்ஹர் இப்றாஹிம்)



மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சர் கீதா குமாரசிங்கவை கல்முனையைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர். மன்சூரினின் புதல்வி சட்டத்தரணி மரியம் நளிமுதீன் அவரது அமைச்சில் சந்தித்தார்.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாகக் கிராமப்புற பெண்களின் வாழ்க்கைத் தரம், சுய தொழில் வாய்ப்புகள், வீட்டில் நடத்தும் சிறு வணிக கடனுதவிகள் மற்றும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட "அஸ்வசுவ" போன்ற பல திட்டங்கள் பற்றி சட்டத்தரணி மரியம் நளிமுதீன் அமைச்சருக்கு விரிவாக விளக்கினார்.

இதனை செவிமடுத்த அமைச்சர் உரிய அதிகாரிகளை அழைத்து இவரின் கோரிக்கைகள் நிறைவேற்றிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணித்தார்.

இலங்கை சனத்தொகையில் 52 வீதம் பெண்கள். ஆனால், நாடாளுமன்ற பிரதிநிதிகள் 225 பேரில், பெண்கள் 12 பேர் மட்டுமே என வருத்தத்துடன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் இருந்து அவர் சந்திக்கும் முதலாவது பெண் சட்டத்தரணி மரியம் நளிமுதீன் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

ஆற்றலும் திறமையும் மிக்க பெண்கள் கிழக்கு மாகாணத்தில் இருக்கின்றார்கள். பல தேவைப்பாடுகள் அவர்களுக்கு இருக்கின்றன. அவர்களை வந்து சந்தியுங்கள், பேசுங்கள், உதவிகள் புரியுங்கள் என சட்டத்தரணி மரியம் நளிமுதீன் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

# வடக்கில் 50 டாக்டர்கள், 20 தாதியர் ஒரு வருடத்தில் வெளிநாடு சென்றனர்

## மாகாண சுகாதார பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தகவல்



வட மாகாணத்தில் ஒரு வருடத்தில் 50 வைத்தியர்களும் 20 தாதியர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என வட மாகாண சுகாதார பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வவுனியா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

வட மாகாணத்தில் ஒரு வருட காலப் பகுதியில் 50 இற்கும் அதிகமான வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். இவர்களில் வெளிநாட்டு கல்விக்காக சென்று வராதவர்களும் உள்ளனர். அத்துடன் 20 தாதியர்களும் வெளியேறியிருக்கின்றனர்.

வைத்தியர்களும் தாதியர்களும் வெளியேறுவது எமக்க ஒரு சவாலான விடயம். அத்துடன் அண்மைக்காலத்தில் கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இங்கு ஆரம்பிக்கப்பட வேண்டிய தாதிய பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இவ்வருடம் தாதிய கல்லூரியில் படித்து வெளியேறுபவர்கள் இருந்தாலும் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு தாதிய பயிற்சிகள் இடம்பெறாத நிலை காணப்படும். ஆகவே, இந்த பகுதிக்கு புதிய தாதிகள் வரமாட்டார்கள். இதனால் நாம் சிக்கலான சவாலை எதிர்கொள்வோம்.

அத்துடன், வெளிநாடுகளில் தாதிகளை வரவேற்கும் நிலைமை காணப்படுவதால் அவர்கள் வேலையை முடிவுறுத்தி வெளியேறலாம். எனவே, எதிர்வரும் காலம் சவாலை எதிர்கொள்ளும் காலமாக அமையும்.

அத்துடன், இலங்கை முழுவதும் மருந்துத் தட்டப்பாடு ஏற்பட்டு வருகின்றது. இருந்தபோதிலும் 90 வீதத்திற்கும் அதிகமான மருந்துகள் அந்தந்த வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

வவுனியா வைத்தியசாலையில் இரத்த சுத்திகரிப்பு ஒரு நாளைக்கு 40 பேருக்கு செய்யப்படுகின்றது. இதனை செய்வதற்கான திரவத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டாலும் தற்போது அது தேவையான அளவு உள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு பின்னர் மருந்து தட்டுப்பாடு வட மாகாணத்தில் அனைத்து வைத்தியசாலையிலும் ஏற்பட்டிருந்தது. இதனால் பொது மக்கள் அசௌகரியத்தினை சந்தித்திருந்தனர்.

தற்போது நிலைமை ஓரளவு சுமுகமாகி வருகின்றது. இருந்தபோதிலும் ஒரு சில கிளினிக் மருந்துகள் மற்றும் விசேட வைத்தியத்திற்காக வழங்கப்படும் மருந்தை பெற்று வழங்குவதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. இதற்கு வைத்தியசாலை பணிப்பாளர் மற்றும் நிர்வாகத்தினர் நன்கொடையாளர்களிடம் மருந்துகளை பெற்று சிகிச்சையை வழங்கி வருகின்றனர்.– எனவும் தெரிவித்தார்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு போலி முகவர் கைதானார்



மட்டக்களப்பில் சட்டவிரோத வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவராக செயற்பட்டு வந்த நபரொருவரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தாங்கள் கைது செய்துள்ளனர் என மட்டக்களப்புத் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் கடந்த வருடம் நவம்பர் மாதம் சவுதி அரேபியாவுக்கு வேலைக்கு அனுப்புவதாக கொக்கட்டிச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரிடம் ஒரு இலட்சம் ரூபாவும், இன்னொருவரிடம் 60 ஆயிரம் ரூபாவும் என ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவை வாங்கி கொண்டு கடந்த 7 மாதங்களாக வெளிநாட்டுக்கு அனுப்புவதாக ஏமாற்றி வந்துள்ள நிலையில் அவருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து, குறித்த போலி முகவரை பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து பொலிஸார் விசாரணையின் பின்னர் மோசடியில் ஈடுபட்ட அவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரைநேற்று சனிக்கிழமை மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# குழந்தை இருதய நோய் நிபுணர்கள் 6 பேர் நாட்டை விட்டு வெளியேறினர்

நாட்டிலிருந்து வைத்தியர்கள் வெளியேறுவது, போதிய வைத்தியர்கள் இன்மை போன்றவற்றிற்கு மத்தியில் குழந்தைகளுக்கான இருதய நோய் நிபுணர்கள் 6 பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்ற கவலை அளிக்கும் செய்தி வெளியாகியுள்ளது.

இதன் காரணமாக, நாட்டில் குழந்தைகளுக்கான இருதய சிகிச்சை சேவைகள் கேள்விக்குறியாகியுள்ளன.

நாட்டில் மருத்துவ துறையில் முழுத் தகுதி பெற்ற குழந்தைகளுக்கான இருதயநோய் நிபுணர்களின் நிலையான எண்ணிக்கை 20 ஆக இருக்க வேண்டும். இருப்பினும், தற்போதைய எண்ணிக்கை பதினொன்றாக மட்டுமே இருந்தது. அவர்களில் ஆறு பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

தற்போது, கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை (LRH), சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் குருநாகல் போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் முழுத் தகுதியுள்ள ஐந்து குழந்தைகளுக்கான இருதயநோய் வைத்திய நிபுணர்கள் மட்டுமே உள்ளனர்.

இந்த வைத்திய நிபுணங்களின் பற்றாக்குறையானது மேலதிக சிகிச்சைக்காக லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு வழிவகுத்துள்ளதாக மூத்த குழந்தை இருதய நோய் நிபுணர் ஒருவர் ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

சிறுவர்களுக்கான சிகிச்சைக்கு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையை பரிந்துரைக்கப்படுவது வழமையான விடயம் என்றாலும், தற்போது சிறுவர்கள் அனுமதிக்கப்படுவது அதிகரித்து காணப்படுதற்கு நிபுணர்களின் பற்றாக்குறைக்கு காரணமாக இருக்கலாம் சுகாதார நிபுணர் மேலும் தெரிவித்துள்ளார்.

லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை உள்ள நான்கு குழந்தை இருதயநோய் வைத்திய நிபுணர்களில், இருவர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

இதன் காரணமாக இருதய சிகிச்சை சேவைகளை நிர்வகிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

தற்போது, இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு வருகிறது. இருப்பினும், சுகாதார அதிகாரிகளின்கூற்றுப்படி,இந்தவிடயத்தை முழுமையாக ஒழுங்குப்படுத்த இன்னும் மூன்று ஆண்டுகள் ஆகும் என தெரிவிக்கப்படுகிறது.




# மாணவர் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் செயற்றிட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம் )

கல்முனை ஸாஹிறா தேசியக் கல்லூரியின் உயர்தர விஞ்ஞானப் பிரிவு மாணவர்களின் அடைவு மட்டத்தை மேம்படுத்தும் நோக்கில் கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கததால், விஷேட செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தை அங்குரார்ப்பணம் செய்துவைக்கும் நிகழ்வு கல்லூரியின் கேட் முதலியார் எம்.எஸ். காரியப்பர் கூட்ட மண்டபத்தில் அதிபர் எம்.ஐ. ஜாபிர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், 2023 இல் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களின் கடந்த நான்கு தவணைப் பரீட்சைகளின் பகுப்பாய்வும், அவர்களுக்கான துரித விஞ்ஞான செயற்திட்ட முன்மொழிவும் பொறியியலாளர் எம்.ஆர்.எம்.பாரிஸால் முன்வைக்கப்பட்டது.

மாணவர் மையக் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாக பழைய மாணவர்கள் சங்கத்தின் செயலாளர் டாக்டர். எம்.என்.எம். தில்ஷான் உரையாற்றினார். இச்செயற்றிட்டத்திற்கான உத்தேச செலவினை டாக்டர். ஏ.டபிள்யூ.ஏ. சிஹாப் ஆக்கில் முன்மொழிந்தார்.



# கோட்ட மட்டத்தில் சாதனை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு நிகழ்வுகல்முனை வலயக் கல்வி அலுவலக உதவிக்கல்வி பணிப்பாளரும், கல்முனை கோட்டக் கல்விப் பணிப்பாளருமான ஏ.பி. பாத்திமா நஸ்மியா சனூஸ் தலைமையில் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

விளையாட்டுப் போட்டியில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி சார்பாக கலந்து கொண்ட தரம் 06 இல் கல்வி பயிலும் எஸ்.எப். அஸ்ரிபா 12 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் 200 மீற்றர் அஞ்சலோட்டத்தில் இரண்டாம் இடத்தையும், 100 மீற்றர், 60 மீற்றர் ஓட்டம் மற்றும் நீளம் பாய்தல் ஆகிய மூன்று தனி நிகழ்ச்சிகளிலும் முதலிடங்களையும் பெற்று சாம்பியனானார்.



கல்முனை கோட்டமட்ட விளையாட்டுப் போட்டியில் சம்பியனான மாணவி எஸ். எப். அஸ்ரிபாவை கௌரவப்படுத்தும் நோக்கில் மஹ்மூத் கல்லூரி கல்வி சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பாராட்டு வைபவம் கல்லூரி அதிபர் யூ.எல்.எம். அமீன் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலய கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபிர் கலந்து கொண்டார்.

# அரசின் அனைத்துத் துறைகளையும் ஆர்.எஸ்.எஸ். தான் நடத்துகிறது!

## - ராகுல் காந்தி குற்றச்சாட்டு



அரசின் அனைத்துத் துறைகளையுமே ஆர்.எஸ்.எஸ். எனப்படும் ராஷ்ட்ரீய ஸ்வயம்சேவக சங்கம் தலையிட்டு நடத்து கிறது என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.

லடாக் பகுதியில் நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலை ஒட்டி இரண்டு நாள் பயணமாக ராகுல் லடாக் சென்றார். ஆனால், அங்கு சென்றபின்னர் தனது பயணத்தை அவர் மேலும் 4 நாட்களுக்கு நீட்டித்தார்.

இதன்போது அவர் லடாக்கில் உள்ள கார்கில் பகுதி இளைஞர்களை சந்தித்துப் பேசவுள்ளார். லடாக் ஹில் கவுன்சில் தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இந்த நிலையில், ராகுல் காந்தியின் லடாக் பயணம் கவனம் பெற்றுள்ளது. அதுவும், ஜம்மு காஷ்மீர் மாநிலம் யூனியன் பிரதேசமாக அறிவிக்கப்பட்ட பின்னர் முதல்முறையாக காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தி அங்குள்ள லடாக் பகுதிக்குச் சென்றுள் ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்போது அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய ராகுல் காந்தி, பா.ஜ.கவின் கொள்கை ஊற்றான ஆர்.எஸ்.எஸ். தான் நாட்டின் அனைத்து துறைகளையும் ஏற்று நடத்துகிறது.

இதற்காக ஒவ்வொரு துறையில் ஆர்.எஸ்.எஸ். சார்புடைய நபர்கள் முக்கியப் பொறுப்புகளில் அமர்த்தப் படுகின்றனர்.

மத்திய அமைச்சர்களே பலரும் தங்களின் துறைகளை தாங்கள் வழிநடத்தவில்லை மாறாக, ஆர்.எஸ்.எஸ். சார்புடைய அதிகாரிகள் தான் நடத்துகின் றனர்.

அவர்கள்தான் எல்லாவற்றையும் பரிந்துரைக்கின்றனர் என்று தெரிவித் துள்ளார்.

## பிரியங்கா காந்தி வாரணாசியில் போட்டியிட்டால் வெற்றி நிச்சயம்!

## - சிவசேனா எம்.பி. நம்பிக்கை

காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் உத்தரப் பிரதேசம் மாநிலம் வாரணாசியில் இருந்து போட்டியிட்டால் அவருக்கு ஆதரவு அளிப்போம் என்று சிவசேனா பால் தாக்கரே கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பிரியங்கா சதுர்வேதி தெரி வித்துள்ளார்.

மேலும், வாரணாசியில் பிரியங்கா போட்டியிட்டால் அவருக்கு வெற்றி நிச்சயம் என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த 2019 மக்களவைத் தேர்தலில் பிரதமர் நரேந்திர மோடி வாரணாசி தொகுதியில் போட்டியிட்டார்.

இந்த நிலையில், இந்தத் தேர்தலில் பிரியங்கா காந்தி வாரணாசியில் எதிர்க்கட்சிகள் கூட்டணி சார்பில் போட்டி யிடக் கூடும் என்று உத்தரப் பிரதேச காங்கிரஸ் தலைவராக பொறுப்பேற்ற அஜய் ராய் நேற்று முன்தினம் பேட் டியளித்த நிலையில், சிவசேனா உத்தவ் தாக்கரே பிரிவு நாடாளுமன்ற உறுப்பினர் பிரியங்கா சதுர்வேதியும் பிரியங்காவுக்கு ஆதரவாகப் பேசி யுள்ளார். சதுர்வேதி மேலும் கூறுகையில்,



பிரதமர் நரேந்திர மோடி நாடாளுமன்றம் தொடங்கி செங்கோட்டை வரை எதிர்க்கட்சி கூட்டணி பற்றியே பேசுகிறார். அவருக்கும், அமித் ஷாவுக்கும் பயம் வந்துவிட்டது என்று தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ராகுல் காந்தி அமேதியில் இருந்து போட்டியிடுவார் என்று அஜய் ராய் கூறியிருந்தார். ராகுல் காந்தி அமேதியில் போட்டியிட்டால் அவர் பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினரும் மத்திய அமைச்சருமான ஸ்மிருதி இரானியை எதிர்கொள்வார். கடந்த 2019 தேர்தலில் ஸ்மிருதி இரானி ராகுலை 55 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நீட்டை ரத்து செய்யுங்கள்: அன்புமணி

மாணவர்களின் தற்கொலைகளுக் கான காரணங்களை கண்டறிந்து அவற்றைஅகற்றாமல், தற்கொலைகளை மட்டும் தடுக்க நினைப்பது முழுமையாக தீர்வை வழங்காது என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள் ளார்.

இது குறித்து அன்புமணி வெளி யிட்டுள்ள அறிக்கையில், நீட் உள்ளிட்ட நுழைவுத்தேர்வுகளுக்கு பயிற்சி அளிப்பதில் புகழ்பெற்ற ராஜஸ்தான் மாநிலம் கோட்டா நகரில் உள்ள விடுதிகளில், மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வதைத் தடுக்க அங்குள்ள மின்விசிறிகளில் ஸ்பிரிங்குகளும், அபாய ஒலி எழுப்பும் கருவிகளும் பொருத்தப்படுவதை நகர நிர்வாகம் கட்டாயமாக்கியிருக்கிறது என ஊடகங்களில் வெளியாகி யுள்ள செய்திகள் வேதனை அளிக் கின்றன.

ஆனால், எய்தவன் இருக்க அம்பை நொந்த கதையாக, மாணவர் களின் தற்கொலைகளுக்கான காரணங் களை கண்டறிந்து அகற்றாமல், தற்கொலை களை மட்டும் தடுக்க நினைப்பது முழுமையாக தீர்வை வழங்காது என்று குறிப்பிட்டுள்ளார்.

# வடகொரியாவுடன் நிபந்தனையற்ற பேச்சுக்கு தயாராகும் அமெரிக்கா!



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், வடகொரிய ஜனாதிபதி கிம்ஜோங் உன்னை முன்நிபந்தனையின்றி சந்தித்து பேச விருப்பம் தெரிவித்துள்ளார் என வெள்ளை மாளிகை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜான்கிர்பே தெரிவிக்கையில், ஆசியாவில் சீன ஆதிக்கம், பசிபிக் தீவுகளுடனான உறவு, மற்றும் வட கொரியாவின் அணு ஆயுத தயாரிப்பு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஜனாதிபதி ஜோ பைடன், ஜப்பான் பிரதமர் புமியோ கிஷாடா, தென்கொரிய ஜனாதிபதி யூன்சுக் யியோல் ஆகியோருடன் முத்தரப்பு சந்திப்பு மாநாட்டை நடத்த திட்டமிட்டுள்ளார்.

இதற்கு பின் வடகொரியா ஜனாதிபதி கிம் ஜோங் உன்னுடன் எந்த வித நிபந்தனையுமின்றி பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், வடகொரிய ஜனாதிபதியை பல முறை சந்தித்து பேசியுள்ளார். எனினும் அவை தனிப்பட்ட முறையிலான சந்திப்புக்களாக காணப்பட்டன.

இந்த நிலையில் தற்போது வட கொரிய ஜனாதிபதியுடனான சந்திப்பில் அணு ஆயுத தயாரிப்பை கைவிடுவது தொடர்பான பேச்சுவார்த்தையே முக்கிய விடயமாக கருதப்படும் என தெரிவித்துள்ளார். இதற்கு முன்னதாக அமெரிக்க ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு வடகொரியா தரப்பிலிருந்து சம்மதம் தெரிவித்துவிட்டது என வடகொரியா தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் மூலம் பைடன், கிம்ஜோங் சந்தித்து பேசலாம் என கூறப்படுகிறது.

## அமெரிக்காவை அச்சுறுத்தும் கடும் சூறாவளி!

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தைக் கடுமையான சூறாவளி தாக்க காணப்படுகிறது என அந்த நாட்டு வானிலை ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஹிலாரி என பெயரிடப்பட்டுள்ள இந்த சூறாவளி நேற்று முன்தினம் உருவாகியுள்ளது. கிழக்கு பசுபிக் கடல் பகுதியை நோக்கி விரையும் இந்த சூறாவளி மெக்சிகோ நாட்டிலும், அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்திலும் கடும் மழை பொழிவை ஏற்படுத்தலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் கடந்த 1939 ஆம் ஆண்டு சூறாவளி காரணமாக இந்த பகுதியில் கடும் மழை மற்றும் பெருமளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போதைய நிலவரப்படி, மணிக்கு 140 மைல் வேகத்தை அடைந்துள்ள இந்த சூறாவளியை 4 ஆவது ரகமாக தேசிய சூறாவளி மைய நிபுணர்கள் வகைப்படுத்தியுள்ளனர்.

இதன் காரணமாகத் தென்மேற்கு அமெரிக்காவில் நேற்று ஆரம்பித்து அடுத்த வாரம் வரை பாரிய புயல் காற்றும், கடும் மழையும் பெய்யக்கூடும் என்றும் இது இன்று அல்லது நாளை மேலும் தீவிரமடையலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தைவான் வான்வெளியில் நுழைந்த சீனாவின் 42 போர் விமானங்கள்!




தைவான் வான்வெளி பாதுகாப்பு மண்டலத்திற்குள் நுழைந்து போர் பயிற்சியில் ஈடுபட்ட 42 சீன போர் விமானங்களினால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தைவானை தனது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பிராந்திய பகுதியாக சீனா கூறி வரும் நிலையில், தனி சுதந்திர நாடாக தைவான் செயல்பட்டு வருகின்றது.

இவ்வாறான நிலையில், தைவானை சுற்றியுள்ள பகுதிகளில் சீனா தனது வான் மற்றும் கடல்வழி ரோந்து பணிகள் மற்றும் இராணுவ பயிற்சிகளை தொடங்கியுள்ள நிலையில் இவ்வாறு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், தைவானின் வான்வெளி பாதுகாப்பு மண்டலத்திற்குள் சீனா பயிற்சியில் ஈடுபட்டுள்ளமைக்கு தைவான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. மேலும், தைவான் நாட்டிற்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் ஆதரவுகரம் நீட்டியுள்ளதுடன், இதற்கு சீனா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இது தொடர்பில் தைவான் தேசிய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில், எங்களது ஆயுத படைகள் 42 சீன போர் விமானங்களை கண்டறிந்துள்ளது.

அவற்றில் கே.ஜே.-500, ஒய்-9, ஜே-10, ஜே-11, ஜே-16, சூ-30 உள்ளிட்டவையும் அடங்கும். இவற்றில் 26 விமானங்கள் தைவான் ஜலசந்தியின் இடைக்கோட்டை கடந்து சென்றுள்ளன. இவை தவிர 8 கப்பல்களுடன் சேர்ந்து விமானங்கள், கூட்டு ரோந்து பணியையும் மேற்கொண்டுள்ளன.

இவற்றை எங்களுடைய விமானம், கப்பல் மற்றும் தரை சார்ந்த ராக்கெட் சாதனங்களை கொண்டு கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறோம் என அந்த தகவல் தெரிவிக்கின்றது.

சீனாவின் சமீபத்திய இந்த இராணுவ பயிற்சிகளுக்கு தைவான் பாதுகாப்பு அமைச்சகம் கண்டனம் தெரிவித்து உள்ளதுடன், தூண்டிவிடும் அணுகுமுறையை சீனா கடைப்பிடிக்கின்றது எனவும் கூறியுள்ளது.

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும்

## முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரான விஜயகலா மகேஸ்வரன் தெரிவிப்பு



(நிதர்ஷன்)

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவால் மாத்திரமே நாட்டை முன் னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முடியும்.

இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் முன் னாள் கல்வி இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித் துள்ளார்.

வட்டுக் கோட்டை தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி அலுவலக திறப்பு விழா வில் கலந்து கொண்டு சிறப்புரையாற் றும்போது மேற்கண்டவாறு தெரிவித் தார்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்துள்ளவை வருமாறு–

ஐக்கிய தேசிய கட்சியின் மறுசீர மைப்பு நாடு பூராகவும் முன்னெடுக்கப் படுகின்றது. அதன் ஒரு அங்கமாக யாழ். மாவட்டத்திலும் கட்சியின் செயலா ளரின் பங்குபற்றுதலுடன் வட்டுக் கோட்டை தொகுதியிலும் செயற்பாடு கள் இடம்பெறுகின்றன.

தற்போது ஜனாதிபதி நாடாளுமன் றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் நாடா ளுமன்ற உறுப்பினர்களால் ஜனாதி பதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதாவது வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆனால் மக்க ளின் வாக்கில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படவில்லை.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் போட்டியிட் டிருந்தார். அந்தக் காலத்தில் வடக்கு மக்கள் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

அதன் காரணமாகத் தற்போதைய ஜனாதிபதியும் எமது கட்சியின் தலை வருமான ரணில் விக்கிரமசிங்க ஒரு லட்சத்து 50 ஆயிரம் வாக்களால் தோல்வியுற்று இருந்தார்.

அதற்கு முன்னர் 1999 ஆம் ஆண்டும் போட்டியிட்டிருந்தார்.

வருகின்ற ஜனாதிபதி தேர்தலி லும் போட்டியிடவுள்ளார். போட்டியிட்டு உண்மையிலேயே அமோக வாக்கு களை பெற்று நாட்டை முன்னோக்கிக் கொண்டு போவதற்கு மக்களாகிய உங்களுடைய போதிய ஒத்துழைப்பு அவசியம். இதனை வேண்டித்தான் இந்தக் கட்சி மறுசீரமைப்பு தற்பொழுது முன்னெடுக்கப்படுகின்றது.

அந்த ஒரு நோக்கத்தோடும் அதற்கும் அப்பால் இந்த நாட்டை கட்டி எழுப்ப வேண்டிய பொறுப்பு நமது கட்சித் தலை வரிடம் உள்ளது.

எனவே வடக்கில் உள்ள மக்கள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எமது கட்சியின் தலைவருக்கு அமோக வாக்க ளித்து அவரை வெற்றியடைய வைக்க வேண்டும். இதன் மூலமே எமது நாட்டை முன்னேற்றிக் கொள்ள முடியும்.

தற்போதுள்ள நிலையில் எமது கட்சி தலைவர் ரணில் விக்கிரம சிங்கவால் மாத்திரமே நாட்டினை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும்.

கடந்த 2014 ஆம் ஆண்டு ஜனாதி பதி தேர்தலில் மைத்திரிபால ஸ்ரீசேன வுக்கு தமிழ் மக்கள் அமோக வாக்க ளித்து வெற்றி அடைய வைத்தோம்.

ஆனால் அவரது ஆட்சியின் இறுதிக் காலத்தில் அரசியல் சூழ்ச்சியைச் செய்து நாட்டில் அரசியல் குழப்பத்தை ஏற்படுத் தினார். இருந்த போதிலும் அப்போ தைய பிரதமரும் தற்போதைய ஜனாதி பதியுமான ரணில் விக்கிரமசிங்கதான் அந்த நிலைமையில் கூட நாட்டிடைச் சுமூகமான நிலைக்கு கொண்டு வந்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவின் ஆட்சியின்போது நாடு பொருளாதார ரீதியில் படுகுழிக்குள் தள்ளப்பட்டு இருந்தது. பொது மக்கள் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்வதில் கடும் இன்னல் பட்டிருந்தனர். இதன்போது தனி மனிதனாக நின்று இந்த நாட்டைப் பொறுப்பெடுத்து, இன்று வரிசை நிலைமையை மாற்றி மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளைச் சிக்கல் இன்றி முன்னெடுப்பதற்கான சகல செயற்பாடுகளையும் முன்னெ டுத்துள்ளார்.

அதேபோல எங்களுடைய தலைவர் எதிர்காலத்தில் ஜனாதிபதியாக வந்தால் வடக்கு பகுதியில் அபிவிருத்தி மற்றும் ஏனைய விடயங்களை கட்டாயமாக நிறைவேற்றுவார்.

அதேபோல இந்த நாட்டில் பொரு ளாதார நெருக்கடி நிலை காரணமாக மூன்று நேர உணவைக் கூட உண்ண முடியாத நிலையில் மக்கள் வாழ்கின் றார்கள். கடந்த காலங்களில் நாங்கள் விட்ட பிழைகளை விடாது ரணிலை ஜனாதிபதி ஆக்குவதற்கு தமிழ் மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

அத்தோடு எமது ஐக்கிய தேசிய கட்சியைப் பலப்படுத்துவதன் மூலம் வடக்கு மக்கள் மாத்திரமில்லாது இலங்கையில் உள்ள அனைத்து மக்க ளும் நிம்மதியாகவும் சந்தோசமாகவும் வாழ முடியும். அதேபோல எதிர்வரும் 10 வருடங்களுக்குள் இந்த நாட்டைப் பழைய நிலைக்கு கொண்டு வரக்கூடிய வழி வகைகள் ஏற்படும்.



எனவே, தமிழ் மக்கள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கி ரமசிங்கவை ஜனாதிபதி ஆக்குவ தற்கு அமோக வாக்களித்து தங்க ளுடைய பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.– என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியை மறு சீரமைப்பு செய்யும் வேலை திட்டம் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வரு கிறது. இந்த நிலையில் ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரங்க பண்டார வின் பங்கு பற்றுதலோடு வட்டுக்கோட்டை தொகுதி ஐக்கிய தேசிய கட்சி அலுவலக மறுசீரமைப்புத் திட்டம் இடம்பெற்றது .

வட்டுக்கோட்டை ஐக்கிய தேசிய கட்சி அலுவலகம் திறந்து வைக்கப்பட்டதோடு பாடசாலை மாணவர்களுக்கு உதவிப் பொருள்களும் வழங்கப்பட்டன.

# இன்றைய ராசி பலன்கள் - 20.08.2023




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். இன்று அபாரமான வளர்ச்சி காணப்படும். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். முக்கியமான முடிவுகள் எடுக்க இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று பணிகள் சுமூகமாக நடக்கும். உங்கள் பணிகளை திறம்படச் செய்வீர்கள்.

இன்று உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதற்கு உகந்த நாள். இன்று புதிய உறவை ஏற்படுத்திக்கொள்ள உகந்த நாள்.

சலுகைகள் மற்றும் ஊக்கத் தொகையாக இன்று பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் அனுகூலமாக இருக்காது. பதட்டம் நிறைந்து காணப்படும். நல்ல பலன்களைக் காண ஆன்மீகத்தில் ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வதால் உறவில் மகிழ்ச்சி குறையும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க நகைச்சுவை உணர்வோடு பழக வேண்டும்.

இன்று சேமிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படும். பயணத்திற்கென பணம் செலவு செய்வீர்கள்.

இன்று பதட்டம் நிறைந்து காணப்படும். ஆரோக்கியமாய் இருக்க உங்களை அமைதியாய் வைத்துக் கொள்ளுங்கள்.




இன்று தேவையற்ற மன வருத்தங்கள் காணப்படும். இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது. பிரார்த்தனை மற்றும் தியானங்கள் மூலம் ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணிகளில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பணிகளில் தவறுகள் நேராமல் இருக்க கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மனதை தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் மகிழ்ச்சியை பராமரிக்கலாம்.

இன்று நிதிவளர்ச்சிக்கு சாதகமான நாளாக அமையாது. இன்று பண இழப்பு காணப்படும்இது உங்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கும்.

இன்று சிறப்பான ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது. கால் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று சிறப்பான நாளாக இருக்கும். உங்கள் திறமையையும் புத்திசாலித்தனத்தையும் பயன்படுத்தி வெற்றி பெறலாம். இன்று மகிழ்ச்சி நிறைந்து காணப்படும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும்.பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடிப்பீர்கள்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை இன்புறச் செய்வீர்கள்.வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு பணம் வர வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். உங்கள் சேமிப்பை இன்று அதிகரிக்க முடியும்.

உங்களின் அனுசரனையான மன நிலை காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்றைய நாள் சுறுசுறுப்புடன் இருக்காது. பதட்டமும் தனிமையும் காணப்படும். தான தர்மம் மற்றும் தொண்டுகளில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் பெறலாம். வெளிப்படையாக இருக்க வேண்டும். எதையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணியில் ஆர்வம் குறைந்து காணப்படும். பணியிடச் சூழல் சலிப்பைத் தருவதாக இருக்கும். ஆர்வம் அதிகரிக்க புதிய யுத்திகளைக் கையாள வேண்டும்.

ஆர்வமின்மையும் பாதுகாப்பின்மை உணர்வும் காணப்படும். உங்கள் துணையிடம் அத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை இன்று சாதகமான நிலையில் காணப்படாது. பண நஷ்டம் காரணமாக நீங்கள் ஏமாற்றத்தை உணர்வீர்கள்.




உங்கள் செயல்களில் சில தாமதங்கள் காணப்படும். உங்கள் அணுகுமுறையில் பொறுமை தேவை. கடவுள் வழிபாடு மற்றும் பிரார்த்தனையில் ஈடுபடுவதன் மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணகளைக் கையாள்வது கடினமாக உணர்வீர்கள். பணியிடத்தில் உங்கள் சக பணியாளர்களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

உறவில் மகிழ்ச்சி நிலவ பொறுமை அவசியம். உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவு பாதிக்கும். எனவே அதனை தவிர்த்தல் நல்லது.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரும். சேமிக்கும் வாய்ப்பும் குறைவு.

ஒவ்வாமை பாதிப்புகள் காணப்படும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் பொறுமையோடு இருக்க வேண்டும். இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். ஆன்மீகத்தில் ஈடுபடுவதன் மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம்.

இன்று அதிக பணிகள் காணப்படும். பணிச்சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்காது. சக பணியாளர்களுடன் தொடர்பு கொள்வதில் சிக்கல்கள் காணப்படும்.

நல்லுறவுக்கு அனுசரித்துப் போதல் வேண்டும். உங்கள் துணையிடம் அத்தகைய அணுகுமுறை மேற்கொள்வது உறவில் அன்பை வளர்க்கும்.

ஆன்மீக நோக்க பயணங்களுக்காக பணம் செலவு செய்வீர்கள். அதில் ஈடுபடுவதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

கண் எரிச்சல் காணப்படலாம்.




உங்கள் லட்சியத்தை நிறைவேற்றிக்கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். தற்போதைய சூழ்நிலையில் உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும். கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து விடுவீர்கள்.

உங்கள் பணியில் நீங்கள் வெற்றி பெற வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை நீங்கள் விழிப்புணர்வுடன் ஒழுங்குமுறையுடன் மேற்கொள்வீர்கள். பதவி உயர்விற்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்த முயல வேண்டும். இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். புதிய முதலீடுகளுக்கு இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.அது உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 20.08.2023




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்களிடம் தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும். இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் செயல் திறன் காரணமாக மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும்.

உங்களின் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவரும் நல்லுறவை பராமரிக்கலாம்.

பண வரவு திருப்திகரமாக இருக்கும். நீங்கள் கணிசமான தொகையை சம்பாதிப்பீர்கள்.

தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை நல்ல ஆரோக்கியத்தை அனுபவிக்க உதவும்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைகாது. எதிர்பார்ப்புகளில் எம்மற்றங்களும் குழப்பங்களும் காணப்படும். இந்தச் சூழ்நிலையை தவிர்க்க பிரார்த்தனை மேற்கொள்ள வேண்டும். குழந்தைகளின் வளர்ச்சி நீங்கள் எதிர்பார்க்கும் அளவுக்குக் காணப்படாது.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். நீங்கள் ஆற்றலுடன் பணியாற்ற திட்டமிடல் அவசியம்.

நீங்கள் விஷயங்களை லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். உங்கள் துணையுடன் நகைச்சுவை உணர்வோடு பழக வேண்டும். இதனால் இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க இயலும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும் செலவுகள் அதிகமாக காணப்படும் காரணத்தால் பணத்தை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று மகிழ்சிகரமான நாளாக அமையாது. விருப்பமானவற்றை அடைய நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். தாமதங்களை சந்திப்பீர்கள். நல்ல விளைவுகளைப் பெறுவதற்கு பயனுள்ள முறைகளை பின்பற்றுங்கள்.

பணியிடத்தில் கடினமான சூழல் காணப்படும். உங்கள் இலக்கை அடைவதில் தாமதங்கள் காணப்படும். உங்கள் பணிகளைக் கையாள்வதில் பொறுமை தேவை.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை கட்டுப்படுத்த வேண்டும். சகஜமாக நடந்து கொள்ள வேண்டும். நட்பு முறையோடு நடந்தால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

செலவுகள் அதிகமாக காணப்படும். தேவையற்ற செலவினங்கள் காணப்பட வாய்ப்புள்ளது.

கால்களில் வலி காணப்படும். இதனால் தூக்கமின்மை பாதிப்பு காணப்படும்.




இன்று மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். புதிய தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்தலாம். விருந்து விழாக்களில் கலந்து கொள்வது மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமை மதிக்கப்படும். நீங்கள் செய்யும் பணிகளை விரும்பி மேற்கொள்வீர்கள்.

இன்று நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேசுவீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இன்று நிதிநிலையை சிறப்பாக பராமரிக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது. பங்கு வர்த்தகத்தில் ஈடுபட முயற்சிக்கலாம். அது உங்களுக்கு லாபகரமானதாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




